ஸ்ரீ மகா கணபதி துணை :
ஓம் நமசிவாய :



# ஸ்ரீ கல்யாண சுந்தரி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில்,

கிடாரங்கொண்டான் கிராமம், தரங்கம்பாடி தாலுகா,
மயிலாடுதுறை மாவட்டம்.

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பத்திரிக்கை

**நாள் : 8/6/2025, ஞாயிற்றுக்கிழமை,**
**காலை 10 மணிக்கு மேல் 11.30 மணிக்குள்**

*ஸ்ரீ விநாயகர் துதி:*

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

*- ஸ்ரீ திருமூலர்*

*ஸ்ரீ கைலாசநாதர் துதி:*

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

*- ஸ்ரீ திருநாவுக்கரசர்*

ஸ்ரீ மகா கணபதி துணை :
ஓம் நமசிவாய :

# ஸ்ரீ கல்யாண சுந்தரி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில்,

கிடாரங்கொண்டான் கிராமம், தரங்கம்பாடி தாலுகா,
மயிலாடுதுறை மாவட்டம்.

நீர்வளமும், நிலவளமும், இறையருளும், நிறைந்ததுமான சோழவள நாட்டின் மஹா சக்ரவர்த்தி ஸ்ரீ முதலாம் ராஜேந்திர சோழன் அவர்கள், இன்றைய மலேசியாவில் பூஜாங் பள்ளத்தாக்கில் *(Bujang Valley)* உள்ள கொடா (கடாரம்) என்ற பகுதியை வென்றதன் அடையாளமாக தமிழகத்தில் சில நகரங்களை மற்றும் கிராமங்களை நிர்மாணம் செய்து அவற்றிக்கு **"கடாரம்கொண்டான்"** என்று பெயரிட்டு தனது கடல்கடந்த வெற்றியை கொண்டாடினார். தமிழகத்தில் அவ்வாறு ஸ்ரீ ராஜேந்திர சோழ மாமன்னரால் பெயரிடப்பட்டு கொண்டாடப்பட்ட பல இடங்களில் நமது கிராமமும் ஒன்றாகும். காலப்போக்கில் "கடாரம்கொண்டான்" என்பது மருவி இன்று **"கிடாரங்கொண்டான்"** என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய வரலாறு சிறப்பு மிக்க நமது கிராமத்தில் சப்த புண்ணிய நதிகளில் மிகவும் உயர்ந்ததுமான ஸ்ரீ காவிரி நதி "பஸ்சிம வாஹினி" யாக புனிதபடுத்திய இடத்தில் அமைந்துள்ளதும், ஸ்ரீ கன்வ மகரிஷியால் பூஜிக்கப்பட்டதும் , அன்னை காவேரியால் ஆராதனை செய்யப்பட்ட எற்றமுடையதுமானது நமது **ஸ்ரீ கல்யாண சுந்தரி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில்.**

காலதேசவர்த்தமானத்தால் நமது திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், தமிழக அரசு நிதியுதவியுடன் சுவாமி விமானம் திருப்பணி கைங்கர்யம் செய்யப்பட்டு, அது தவிர ஏனைய திருப்பணி கைங்கர்யங்கள் அனைத்தும் நமது கிடாரங்கொண்டான் கிராமத்தை பூர்வீகமான கொண்டவரும், ஸ்ரீ குருஜீ என்று எல்லாராலும் அன்பாக அழைக்கப்படும் **மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி** அவர்களின் பரிபூரண அருளாசிகள் மற்றும் வழிகாட்டுதல் படி **ஸ்ரீ PPK. பரமசிவம்** (நிர்வாக இயக்குநர், தி சென்னை சில்க்ஸ், குமரன் தங்க மாளிகை, *SCM GARMENTS*) அவர்களால் திருப்பணி கைங்கர்யம் பூர்த்தி செய்யப்பட்டு நாளது **விசுவாவசு வருஷம், வைகாசி மாதம் மாதம் 25ம் தேதி (8/6/2025) ஞாயிறுக்கிழமை, ஸ்வாதி நக்ஷத்ரம் கூடிய சுபயோக சுபதினத்தில், காலை 10 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் சிம்ம லக்னத்தில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள்** அவர்களின் அருளாசிகளுடனும், **மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி** அவர்களின் முன்னிலையில் நடைபெற இருப்பதால் ஆஸ்திக பக்த மஹாஜனங்கள் அனைவரும் அன்வயித்து மகா கும்பாபிஷேகம் வைபவத்தில் கலந்துகொண்டு பகவானின் க்ருபா கடாக்ஷத்திற்கு பாத்திரமாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம் / கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

## கிடாரங்கொண்டான் கிராமவாசிகள்

திரு ச. ஹரிசங்கரன்
ஆய்வாளர், கூடுதல் பொறுப்பு இந்து சமய அறநிலையத்துறை செம்பனார்கோயில்

திருமதி ஏ ஆர் ஸ்ரீதேவி
தக்கார் /செயல் அலுவலர், இந்து சமய அறநிலையத்துறை
ஸ்ரீ கல்யாண சுந்தரி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில், கிடாரங்கொண்டான்

## யாகசாலை நிகழ்ச்சி நிரல் :

| | |
|---|---|
| விசுவாவசு வருஷம், வைகாசி மாதம் 22ம் தேதி (5/6/2025), வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் | விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம், அனுஜ்ஞை, , தனபூஜை, மஹாதீபாராதனை, பிரசாத விநியோகம் |
| வைகாசி மாதம் 23ம் தேதி (6/6/2025), வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் | கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், மஹாதீபாராதனை, பிரசாத விநியோகம் |
| மாலை 4 மணி முதல் | வாஸ்து சாந்தி, ம்ருத்ஸங்க்ரஹம்,, அங்குரார்பணம், ரக்ஷாபந்தனம்,கும்பலங்காரம், கும்பத்தில், கலாகர்ஷணம், யாகசாலை ப்ரவேசம், முதல் கால யாகபூஜை, பூர்ணாஹுதி, மஹா தீபாராதனை, பிரசாத விநியோகம். |
| வைகாசி மாதம் 24ம் தேதி (7/6/2025), சனிக்கிழமை காலை 7 மணியளவில் | விஸேஷ சந்தி, மண்டபார்ச்சனை, இரண்டாம் கால யாகபூஜை, த்ராவ்யாஹுதி, பூர்ணாஹுதி, மஹா தீபாராதனை, பிரசாத விநியோகம் |
| மாலை 5 மணியளவில் | விஸேஷ சந்தி, மண்டபார்ச்சனை, மூன்றாம் கால யாகபூஜை, த்ராவ்யாஹுதி, பூர்ணாஹுதி, மஹா தீபாராதனை, பிரசாத விநியோகம் |
| வைகாசி மாதம் 25ம் தேதி (8/6/2025), ஞாயிற்றுக்கிழமை, காலை 7 மணியளவில் | நான்காம் கால யாகபூஜை, பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம், தத்வார்ச்சனை, ஸ்பர்ஸாஹுதி, த்ராவ்யாஹுதி,<br>**காலை 9.30 மணிக்கு மஹா பூர்ணாஹுதி**<br>**காலை 10.30 மணிக்கு விமான கும்பாபிஷேகம்**<br>**காலை 11 மணிக்கு மூலவர் மற்றும் பரிவார தேவதைகள் கும்பாபிஷேகம்.**<br>மஹா தீபாராதனை, பிரசாத விநியோகம், |
| மாலை 4 மணியளவில் | மஹா அபிஷேகம் |

ஆலய அர்ச்சகர்: "சிவாகம ஞானபாரதி" சிவஸ்ரீ G. காமேஸ்வர சிவம், கிடாரங்கொண்டான்.
ஸர்வசாதகம் : "சிவாகம வல்லூர்" சிவஸ்ரீ நன்னிலம் ராமமூர்த்தி சிவாச்சாரியார்,
உப ஸர்வசாதகம் : சிவஸ்ரீ D. கணேசன் சிவாச்சாரியார், கிடாரங்கொண்டான், போன் : 9367183384

யாகசாலை சிறப்பு அழைப்பாளர் : "சிவாகம பிரவீனர், சிவாகம கலாநிதி, சிவானுபூதி," சிவஸ்ரீ டாக்டர் P. சுவாமிநாத சிவாச்சாரியார், முதல்வர் முதல்வர் ஸ்ரீ சொர்ணவள்ளி அம்பிகா சமேத ஸ்ரீ முக்தீஸ்வர ஸ்வாமி வேத சிவாகம பாடசாலை

திருப்பணி மற்றும் கும்பாபிஷேக கைங்கர்யங்களின் ஒருங்கிணைப்பாளர்

**ஜெய ஹனுமான் சேவா டிரஸ்ட், சென்னை**

**ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு**
**திராவிட வேத ஆகம பாடசாலை, திருநாங்கூர்**

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

# திருமிகு மு.க. ஸ்டாலின்

## அவர்களின்

## சீர்மிகு நல்லாட்சியில்

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
திருமிகு பி.கே. சேகர்பாபு அவர்கள்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திருமிகு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்

இவர்களின் வழிகாட்டுதலின்படி

திரு. நிவேதா M. முருகன் M.L.A. அவர்கள்
பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர்

திரு. R. சுதா B.A.,B.L., அவர்கள்
மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர்

திரு.சி.சுவாமிநாதன் அவர்கள்
மாவட்ட அறங்காவலர் குழு தலைவர்

திருமதி. காஞ்சனமாலா சேகர் அவர்கள்
மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்

திரு. வை.துரைராஜன் அவர்கள்
மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்

திரு. K. கலையரசன் அவர்கள்
மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்

திரு. S. சிவலிங்கம் அவர்கள்
மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்

திரு. P.N. ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்கள்
ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை

திரு. ஹெச். எஸ். ஸ்ரீகாந்த் இ.ஆ.ப. அவர்கள்
மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை.

திருமதி. G.ஸ்டாலின் இ.கா.ப. அவர்கள்
மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயிலாடுதுறை.

திரு.ச.சிவகுமார் B.Sc.,BL., அவர்கள்
இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை மயிலாடுதுறை.

திரு. S. பாலாஜி T.P.S. அவர்கள்
மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மயிலாடுதுறை.

திரு. ஆ. இரவிச்சந்திரன்
உதவி ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை, மயிலாடுதுறை.